## கழக அரசு சார்பாக கீழடி, நெல்லை, பொருநை போன்ற இடங்களில் அருங்காட்சியகங்கள்!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கிராமப்புறங்களில் 1,166 தரைப்பாலங்கள் - உயர்மட்டப் பாலங்கள்!

### சட்டமன்றத்தில் பொதுப்பணித்துறை மானிய விவாதத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு பேச்சு...

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

## நெடுஞ்சாலைத் துறைக்கு முக்கியத்துவம் தந்து 67,211 கிலோ மீட்டர் நீள சாலை பராமரிக்கப்பட்டது!

அடுத்ததாக, நிர்வாக சீர்திருத்தம் என்ற பெயரில் ஒன்றிய அரசுக்கு இணையாக மாநில நெடுஞ்சாலை ஆணையம் ஒன்று, 7-3-2024 அன்று ஆளுநர் ஒப்புதலுடன் சட்டப்படி இதே மாமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டு, துவக்கப்பட்டது. சென்னை, கோவை, மதுரை, திருச்சி ஆகிய 4 புதிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டன. தரமான சாலைகளை அமைக்கும்பொருட்டு தரக் கட்டுப்பாட்டுக் 10 கோட்டப் பொறியாளர் குழு அமைக்கப்பட்டது;

**நிர்வாகச் சீர்திருத்தம்!**

அதோடு மட்டுமல்ல; இந்த விபத்து இல்லா மாநிலம் என்ற இலக்கை அடைவதற்காக, ‘நம்ம சாலை’ என்ற புதிய செயலியை உருவாக்கி, 1-11-2023 அன்று அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய திருக்கரத்தால் அந்த செயலி துவக்கப்பட்டது. அதன்மூலம், 13,300 புகார்கள் பெறப்பட்டு, பள்ளம் இல்லாத சாலைகள் சீர்செய்யப்பட்டு, பொதுமக்களிடம் நற்பெயர் பெற்றுக்கொண்டிருப்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நெடுஞ்சாலையைப் பொறுத்தளவில், முதன்முதலாக, 2002 ஆம் ஆண்டில் முதன்முதலாக Internal Audit என்ற ஒரு முறையைக் கொண்டுவந்தோம். ஏனென்றால், ஒருகாலத்தில், மாநிலத்தில் ஆண்டு முழுவதும் மாநிலத்தில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது குறித்தும் தெரியாமலேயே இருந்தது. அந்தக் காலத்தில் M-Book-களைக் கட்டிப் போட்டுவிடுவார்கள். நாம் தேடிப் பார்த்தாலும் கிடைக்காது. அப்படிப்பட்ட நிலையில் எங்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே, internal audit என்ற முறையைக் கொண்டுவந்து, ஆண்டிற்கொருமுறை Divisional Level-ல் audit செய்து அரசாங்கத்திற்கே கொண்டுவந்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், அந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டு வரையில், இத்துறையில் 1,074 ஒப்பந்ததாரர்கள்தான் இருந்தார்கள். எனவே, போட்டி அதிகமாக உருவாக்க வேண்டும் என்கிற அடிப்படையில், எங்கள் ஆட்சி புதிதாக பொறுப்பேற்றவுடன் 2024 ஆம் ஆண்டுவரையில் 1,255 புதிய ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யப்பட்டு, ஒப்பந்தப் பணிகளின் விதிகளுக்குட்பட்டு சாலைகள் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டது என்பது வரலாறு. பாலங்களின் உறுதித் தன்மையைக் கண்டறிவதற்காக அவற்றை ஆய்வு செய்வதற்காக, ‘பாலங்கள் சிறப்பு ஆய்வு அலகு’ என்ற ஒரு அலகு தொடங்கப்பட்டது. 22 மாவட்டங்களில் என் தலைமையில் கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, நெடுஞ்சாலைத் துறை, காவல் துறை ஆகிய துறைகளின்மூலம் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கும்பகோணம், அறந்தாங்கி, கோவில்பட்டியில் 3 புதிய கோட்டங்கள் துவங்கப்பட்டன. அதோடு மட்டுமல்ல; இன்று அண்ணா சாலை என்று சொல்லப்படுகிற தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, 3.2 கி.மீ. தூரத்திற்கு 621கோடி மதிப்பீட்டில் நான்குவழி உயர்மட்டப் பாலம் கட்டப்படுகிறது. Metro rail-சுரங்கப்பாதைக்கு மேல் உயர்மட்டப்பாலம் உலகத்திலேயே முதன்முறையாக அமைக்கப்படுகிறது. மெட்ரோ சுரங்கப்பாதையில் கீழே போகும்போது, மேல்வழியாகப் போவது. இதுபோன்று உலகத்திலேயே வேறு எங்கும் பாலம் இல்லை. இந்த design-ஐ யார் செய்தார்கள் என்றால், தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறையின் பொறியாளர்கள். நம் மாநிலத்தின் பொறியாளர்களின் திறமை நாட்டிற்குத் தெரிய வேண்டும். தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பொறியாளர்கள், சென்னையில் IIT. அதோடு மட்டுமல்ல,

நமது பெருமையை நாம் பேசியாக வேண்டுமே! நமது பொறியாளர்களைப் பற்றிதான் சொல்கிறேன். நமது பொறியாளர்கள்தான் அங்கும், அந்த பொறியாளர்கள்தான் இங்கும் பணிபுரிகின்றார்கள். சென்னை IIT, தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பொறியாளர்கள், Nippon Koei, ஆகிய 3 நிறுவனங்களும் ஒன்றாக இணைந்துதான் அந்த design-ஐ செய்தார்கள். அதில் நமக்கு என்ன பெருமை என்றால், ஜப்பான், Tokio Marine என்கிற நிறுவனம் சர்வதேச விருதை நமக்கு அளித்திருக்கிறது. அதுதான் இப்பணியின் சிறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு சிறப்பாக அதனை செய்திருக்கிறோம். (குறுக்கீடு)

**அரசு ஒப்பந்தங்களில் மதிப்பீடு!**

அரசு ஒப்பந்தங்களில் மதிப்பீடு என்பது மிக முக்கியமானது. மதிப்பீடுகளின் அடிப்படையில்தான் ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன. மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு அடிப்படையாக Schedule of Rates (SOR) தான் பயன்படுத்த வேண்டும். இதற்கான அரசாணை, 25-4-1947 அப்போதுதான் முதன்முதலில் Schedule of Rates (SOR)-ஐ ஆரம்பித்தார்கள்.

17-11-1992-ல் இரண்டாவது ஆணை, 14-3-2004-ல் மூன்றாவது ஆணை. ஆக, தமிழ்நாட்டில் 3 Schedule of Rates என்கிற ஆணை போடப்பட்டிருக்கிறது. இதுதான் shedule of rate என்கிற ஆணைகள் சம்பந்தப்பட்டதுதான் இந்த 3 values. 1, 2, 3 இந்த valueதான் Schedule of Rates என்கிற value. இந்த values வைத்துக் கொண்டுதான் யாராக இருந்தாலும், ஒவ்வொரு துறையிலும் இதன்மூலமாக நாம் செய்ய முடியும். இந்த ஆணையைத் தயாரிக்கும் குழுவில் நிதித் துறையின் செயலாளர் அல்லது அவரால் நியமிக்கப்படுகிற I.A.S. அதிகாரி. அதோடு மட்டுமல்ல, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நீர்வளத் துறை, தமிழ்நாடு நகர்ப்புறத் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதித் துறை, வனத் துறை, காவலர் வீட்டு வசதிக் கழகம், தோட்டக்கலைத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய துறைகளினுடைய தலைமைப் பொறியாளர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்படுகிற பிரதிநிதிகள்தான், SOR என்பதைத் தயாரிக்கும் குழுவாக இருந்து அதைத் தயாரிக்கிறார்கள். அதை தயாரித்த பிறகுதான் அனைத்துத் துறைகளுக்கும் அது அனுப்பப்படும். அனுப்பியதன் அடிப்படையில்தான் திட்டங்களை மதிப்பீடு செய்வார்கள். இதற்கு எப்படி Schedule of Rates-ஐ calculate செய்கிறார்கள் என்றால் மத்திய அரசாங்கத்தினுடைய எஃகு உற்பத்தி நிறுவனத்தின் ஸ்டீல் விலை, தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தினுடைய சிமெண்ட் விலை, தொழிலாளர் நலத் துறை சார்பாக நிர்ணயிக்கப்படும் ஊதிய விகிதங்கள், ஆள் கூலி, அதுமட்டுமல்ல, Schedule of Rate என்பது மணல் இவை எல்லாம் எங்கெங்கெல்லாம் இருக்கிறதோ, M-sand இருக்கிறதோ அதன் bill எல்லாம் வாங்கி summary செய்து, இந்தக் கூட்டம்தான் முதன்முதலாக SOR என்கிற Schedule of Rate என்பதைத் தயார் செய்து, அதைப் பொதுப் பணித் துறையின் சார்பாக, அந்தத் துறையின் செயலாளரை வைத்து வெளியிடுகிறார்கள். அது அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்படுகின்றன.

நான் இதைச் சொல்வதற்கு என்ன காரணம் என்றால், அன்றைக்கு முதலமைச்சர் தன்னுடைய பதிலுரையில் பேசுகிறபோது, நாங்களெல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். முதன்முதலாக முதலமைச்சர் வந்திருக்கிறார். அவருடைய உரையை முழுமையாகக் கேட்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தோம். பேசிக் கொண்டிருந்த முதலமைச்சர் திடீரென்று என்ன சொன்னார் என்றால், அவர் பேசிய முழு உரையையும் நான் வைத்திருக்கிறேன். ஆனால், அதை நான் சுருக்கமாகச் சொல்கிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அளித்த பதிலுரையில் tender-களை முறைப்படுத்த தெரிந்த அளவிற்கு tender rate-ஐ உயர்த்தி ஊழல் செய்யத் தெரியாது என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார். ஊழல் என்ற வார்த்தையை தயவுசெய்து நீங்கள் இப்போதே எடுத்துவிடுங்கள். அவர் சொன்ன வார்த்தையைத்தான் quote செய்கிறேன். நீங்களே எடுத்துவிடலாம். எங்களுக்கு rate-ஐ ஏற்றத் தெரியாது. ஏனென்றால், rate ஏற்றுவது எல்லாம், முதலமைச்சர் அவர்களை என்ற அடிப்படையில் தான் (குறுக்கீடு)

சட்டமன்றத்தில் இது ஒரு பதிவாக இருக்கிற காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால் முதலமைச்சர் அவர்களுக்கு அதிகமான திறமை இருக்கிறது என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், நான் சொல்ல விரும்புவது என்னுடைய வயதிற்கு நான் இந்தச் சட்டமன்றத்திற்கு 1984-ல் வந்தேன் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். நான் எந்தவிதமான தவறான வார்த்தைகளோ அல்லது unparliamentary words பயன்படுத்தமாட்டேன். அது போன்று பயன்படுத்தவும் எனக்குத் தெரியாது. ஏனென்றால், அப்படித்தான் எங்களையெல்லாம் வளர்த்திருக்கிறார்கள். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். காலத்திலும் சரி, அண்ணன் கலைஞர் காலத்திலும் சரி, என்னுடைய தலைவர் திராவிட மாடல் நாயகன் எங்களை அப்படித்தான் வளர்த்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒன்றும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், இந்த Schedule of Rates என்பது எப்படி தயார் செய்யப்படுகிறது. நாளைக்கு, அமைச்சராக இருப்பவர்கள் பிற்காலத்தில் ஒரு கேள்வி கேட்கும்போது நீங்களும் இப்படித்தான் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தப் புத்தகத்தை நான் ஒன்றும் தயார் செய்ய முடியாது. Schedule of Rates நான் செய்ய முடியாது. இது காலம் காலமாக 1947-ல் சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து Schedule of Rates என்பது அரசினுடைய guide மாதிரி. அரசினுடைய அனைத்துத் துறைகளுக்கும் guide மாதிரி. நான் எல்லாத் துறைகளையும் சொல்லிவிட்டேன். இதில் தவறாக நான் ஒன்றையும் சொல்லவில்லை என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்ல, இந்தத் துறையைப் பற்றி நீங்கள் சொல்ல வேண்டும் என்று நினைத்தீர்கள். நான் சுருக்கமாகச் சொல்கிறேன். முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இப்போது இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் சொல்கிறேன். முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்கிற பெயரில் 497 கி.மீ. நான்கு வழித்தடமாக, 77 கி.மீ. இரு வழித்தடமாக மேம்படுத்தும் நிலை, பணியாக உள்ளது என்று பக்க எண் 37-ல் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், இந்தத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் எத்தனை கிலோ மீட்டர் நான்கு வழித்தடம், எத்தனை கிலோ மீட்டர் இரண்டு வழித்தடம் என்று எதையும் குறிப்பிடவில்லை. ஒரு திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது இந்த வருடம் இவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, இவ்வளவு பணிகள் செய்யப்படும் என்ற குறிப்பிடப்பட வேண்டும். ஆனால், அப்படிச் சொல்லப்படவில்லை.

அதோடு மட்டுமல்லாமல், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம். அனைத்துப் பருவக் காலங்களிலும் தங்குதடையின்றி சாலைகளை இணைக்கும் திட்டம், உயர்மட்டப் பாலங்கள் அமைத்தல் ஆகிய தலைப்புகளில் நிலுவையிலுள்ள பணிகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் எத்தனை பணிகளை மேற்கொள்ளவுள்ளோம் என்ற விவரம் அதில் இடம்பெறவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், “எங்கள் தொகுதியில் இந்தச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; இந்தப் பள்ளம் சீர் செய்யப்பட வேண்டும்; மழைக் காலம் என்பதால் இந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று” எழுத்துப் பூர்வமாக கோரிக்கை வைப்பார்கள். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக அந்தத் தலைப்புகளின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ஆனால், என்னென்ன பணிகளை செய்யப் போகிறோம், எத்தனை பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பது குறித்த விவரங்கள் அதில் குறிப்பிடப்படவில்லை.

அதேபோல, புறவழிச் சாலைகள், நகர்ப்புறப் பகுதி சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பான நிலுவையில் உள்ள பணிகள் குறித்து மட்டுமே பக்கங்கள் 40 மற்றும் 41-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படும் என எந்தத் திட்டங்களும் குறிப்பிடவில்லை.

**பேரிடர் மேலாண்மை செயல்பாடுகள்!**

அதேபோன்று பேரிடர் மேலாண்மைச் செயல்பாடுகள் குறித்தோ, வெள்ளத் தடுப்புப் பணிகள் குறித்தோ இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பது குறித்து கொள்கை விளக்கக் குறிப்பில் எங்கும் குறிப்பிடவில்லை. எனவே, இவையெல்லாம் குறிப்பிட்டிருந்தால், வருங்காலத்தில் சக சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்தில் கேள்விகளைக் கேட்பதற்கு வாய்ப்பாக அது அமைந்திருக்கும்.

நான் நிறைவாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், மனிதவள மேலாண்மை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். உதாரணமாக, இந்தச் சட்டமன்றத்தில் நாம் நின்று பேசிக் கொண்டிருக்கிறோம். முதன்முதலாக நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த காலத்திலும் சரி, அவை முன்னவராக இருக்கக்கூடிய என்னுடைய நண்பர் சட்டமன்ற உறுப்பினராக வந்தபோதும் சரி, முதலமைச்சராக இருந்து சிறப்பாகப் பணியாற்றிய எங்களுடைய அண்ணன் ஓ.பி.எஸ். சட்டமன்ற உறுப்பினராக வந்தபோதும் சரி, இந்த இடத்தில் 5 அடிக்கு ஒரு பெரிய table போடப்பட்டிருக்கும். இரண்டு பக்கங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருப்பார்கள். பிரச்சினைகள் பெரிதாக உருவாகும்போது, ஒருவரையொருவர் கையைப் பிடித்துக் கொண்டு இழுத்துக்கொள்கிற அளவுக்கு நடைபெற்ற வரலாறுகள் எல்லாம் உண்டு.

ஆனால், இன்றைக்கு இப்படி அமைச்சர் பெருமக்கள் அமர்ந்திருக்கின்ற கலைநயத்தோடு உருவாக்கப்பட்ட table, முதலமைச்சர் அமர்ந்திருக்கின்ற கலைநயத்தோடு உருவாக்கப்பட்ட table, எதிர்க்கட்சித் தலைவர் அமர்ந்திருக்கின்ற கலைநயத்தோடு உருவாக்கப்பட்ட table, எதிர்க்கட்சியில் இருக்கின்ற நம்முடைய தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருக்கின்ற கலைநயத்தோடு உருவாக்கப்பட்ட table, இந்த table, நாம் பேசுகின்ற ஒலிவாங்கி என்கிற mike, செயலாளர் அமர்ந்திருக்கின்ற table இவை அனைத்தையும் செய்தது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அரசின் பொதுப் பணித் துறை அமைச்சராக நான் பொறுப்பு வகித்தபோது பார்த்து, பார்த்து இரவு நேரத்தில்கூட இப்படி செய்ய வேண்டுமென்று நான் சொல்லி செய்தவைதான். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள். உங்களைப் பார்த்தோ அல்லது உங்கள் துறை சம்பந்தமாகவோ நான் பேசவே இல்லையே! நீங்கள் இறுதியாகப் பேசுங்கள். என்னுடைய நேரத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளா தீர்கள்.

இந்த மாதிரியான பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்றால், அரசு அதிகாரிகள் நமக்கு ஒத்துழைக்க வேண்டும். அரசு ஒரு திட்டத்தைத் தீட்டுகிறது என்று சொன்னால், அந்தத் திட்டம் மக்களைச் சென்றடைய வேண்டுமென்று சொன்னால் அது அரசு அலுவலர்களின் கையில்தான் இருக்கிறது. அதனால்தான் நான் சொல்கிறேன். உங்கள் அலுவலர்கள், எங்கள் அலுவலர்கள் என்றெல்லாம் கிடையாது. நேற்று எங்களுக்கு இன்று உங்களுக்குச் அரசு அதிகாரிகள் பொதுவானவர்கள்தான். ஜனநாயகத்தில் மக்கள் யாருக்கு வாக்களிக்கிறார்களோ மாறி மாறி ஆட்சியமைத்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால், அரசு அதிகாரிகள் பொதுவானவர்கள் தான். அந்த அரசு அதிகாரிகளுக்கு நல்லதைச் செய்ய வேண்டுமென்று முதலில் எண்ணியது யார் தெரியுமா? என் அண்ணன் கலைஞர் தான் அரசு அலுவலர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொல்வது எதற்காக என்றால், வருங்காலத்தில் இந்த ஆட்சியில் இருப்பவர்களும் செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். அரசு ஊழியர்களின் ஊதியம் என்பது திட்டத்தோடு இணைந்த ஒன்றுதான். ஆசிரியர்கள் இந்த நாட்டினுடைய கண்கள். இல்லையென்றால் சொன்னால், பண்பட்ட சமூகம் உருவாகாது. அதனால் தான், கழக ஆட்சி அமைந்தபோது என் தலைவர் கலைஞர் , அரசு அலுவலர்களுக்கு எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றினார். 1972 ஆம் ஆண்டு--பழிவாங்கும் இரகசியக் குறிப்பேடு என்று அரசு அலுவலர்களுக்கு ஒரு காலத்தில் இருந்தது. அதை இரத்து செய்தவர் அண்ணன் கலைஞர் . அரசு அலுவலர்கள் பணிக் காலத்தில் இறந்தால், வாரிசு அடிப்படையிலான பணி உரிமை 15-1-1972 அன்று முதல்தான் நடைமுறைக்கு வந்தது. அரசு அலுவலர்கள் இறந்தால், 10,000 ரூபாய் இறந்தவர்களின் குடும்பத்தார்களுக்கு வழங்க வேண்டுமென்று முதன்முதலில் சொன்னவர் தலைவர் கலைஞர் . இப்போது இலட்சக்கணக்கில் வழங்கப்பட்டு வருகிறது. பொங்கல் போனஸ் வழங்கியவர் கலைஞர். அதோடு மட்டுமல்லாமல், ஒன்றிய அரசாங்கத்திற்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களை வகுத்துக் கொடுத்தவர் அண்ணன் கலைஞர். அரசு அலுவலர்கள் 30 ஆண்டுகள் பணி புரிந்தால், அவர்களுக்கு முழு ஓய்வூதியத் தொகை வழங்க வேண்டுமென்று சொன்னவர் கலைஞர். 15 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்புவிப்பு செய்தால், அதற்குப் பணப்பலன்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னவர் கலைஞர். 2008 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை கொண்டுவந்தவர் கலைஞர். அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும்போது வழங்கப்படும் பணிக்கொடை தொகையை ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாக உயர்த்தியது திராவிட மாடல் ஆட்சியில் எங்களுடைய அண்ணன்தான். நான் ஒன்றே ஒன்று கேட்க விரும்புவது,

**ஒன்றிய அரசாங்கத்தின் அழுத்தம்!**

முக்கியமானது இது. எங்களைப்பற்றி பேசும்போது, மணியடித்துவிட்டீர்களே என்று உங்கள் அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் நாளைக்கு உங்களையே கேட்டுவிடுவார்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. உங்களுக்கு நல்ல பெயர் வரவேண்டும் என்பதற்காக சொல்கிறேன். 1-4-2003 ஆம் ஆண்டில் ஏற்கெனவே பழைய ஓய்வூதியத் திட்டம் என்று இருந்தது. அதை ரத்து செய்துவிட்டார்கள். அப்போதிருந்த ஒன்றிய அரசாங்கம் கொடுத்த அழுத்தத்தின்காரணமாக, அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் அதனை இரத்து செய்துவிட்டார்கள். அதற்குப்பிறகு பல போராட்டங்கள். 2003-லிருந்து 2026 வரை, நீங்கள் பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் பார்த்திருப்பீர்கள். சென்னையிலே பார்த்தால் பல போராட்டங்கள் .

அதாவது, 2003-லிருந்து பெரிய போராட்டம் நடந்தது. அப்போது, அரசு அதிகாரிகளெல்லாம், முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து கேட்டார்கள். உடனே முதலமைச்சர் என்ன செய்தார் என்று கேட்டீர்களென்றால், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான ககன்தீப் சிங் பேடி அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைத்தார்கள். இந்தப் பிரச்சினையை எப்படியாவது தீர்க்க வேண்டுமென இக்குழுவினை அமைத்தார்கள். அவர் மூன்று மாத காலத்திற்குப் பிறகு, இதுகுறித்து அறிக்கையினை அரசுக்கு அளித்தார்.

முதலமைச்சர் என்ன செய்தார்கள் என்றால், அரசு அதிகாரிகள் குழு அமைத்து இந்த அறிக்கையினை study செய்யுங்கள் என்றார். அதற்காக என்னுடைய தலைமையில், நிதித் துறை அமைச்சராக இருந்த சகோதரர் தங்கம் தென்னரசு மற்றும் கல்வித் துறை அமைச்சராக இருந்த அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் அடங்கிய மூவர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவில் அந்த அதிகாரிகளைப் பலமுறை நான் சந்தித்து பேசினேன். அதனுடைய விளைவாக, கடைசியாக என்ன ஒப்புக் கொண்டார்களென்றால், உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்ற ஒரு நிலை வந்தது. அப்போது, பேசியது என்னவென்றால், கடைசியாக நாங்கள் ஓய்வுபெறுகிறபோது என்ன சம்பளமோ, அதில் 50 சதவிகிதத்தை ஓய்வூதியமாகத் தர வேண்டும். ஓய்வூதிய காலத்தில் எங்கள் குடும்பத்திலே.

அரசு அலுவலர் சம்பந்தப்பட்டதுதான். தற்போது நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) ஒன்றே ஒன்று. உறுப்பினர்கள், நீங்கள் உட்காருங்கள். அவர் நல்லவர். நீங்கள் என்ன support செய்கிறீர்களா?

அந்த ஓய்வூதியம் குறித்த 2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குழுவைப் பற்றிச் சொன்னால் தான் ..

பதிலை அமைச்சர் சொல்லாமல் விட்டுவிட்டால், அப்போது நீங்கள் சொல்வதுதான் (குறுக்கீடு) இல்லை, குற்றச்சாட்டு அல்ல. இந்த வினாவைக்கூட எழுப்புகின்ற நேரம் இதுவல்ல என்று நான் கருதுகிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீதான கருத்துகளை மட்டும் நீங்கள் சொல்வது பொருத்தமாக இருக்கும். அதைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

நான் அந்த point-க்கு செல்லவில்லை. ஏனென்றால், நேரம் எடுத்துக்கொள்கிறீர்கள் என்று சொல்வீர்கள். அதனால் அதற்கு செல்லவில்லை. ஏற்கெனவே, இந்த உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கு YMCA ground-ல் பாராட்டுக் கூட்டமே நடத்தினார்கள். நான் எதற்காக சொல்ல வருகிறேன் என்றால், அதையும் ஏற்றுக்கொண்டார்கள்; கடைசியாக என்ன கேட்டார்கள் என்றால், எங்களை 10 சதவிகிதம் பங்களிப்புச் செய்யச் சொல்கிறீர்களே, அதை எடுத்துவிட வேண்டுமே என்று சொன்னார்கள். 2026-2027 தேர்தலுக்குப் பின்னால், முடிந்தால் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி consider செய்கிறோம் என்று நான் சொன்னேன்; எடுத்துவிடுகிறோம் என்று சொல்லவில்லை. அவருடைய கவனத்திற்கு கொண்டு செல்கிறோம் என்று சொன்னேன். அதற்குப்பிறகு அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரும் நிம்மதியாக சென்றனர். இந்த நேரத்தில்தான் தேர்தல் வந்தது. இந்த தேர்தல் அறிக்கைப் புத்தகம் மிகவும் அழகாக இருக்கிறது. எனக்கு இந்தப் புத்தகத்தை மிகவும் பிடித்திருக்கிறது. ஏனென்றால், எனக்கு பொதுவாகவே திருக்குறள் என்றால் மிகவும் பிடிக்கும். நான் திருக்குறளை வைத்து ஒரு புத்தகத்தை வெளியிட்டேன்; அது உங்கள் அனைவருக்கும் தெரியும். இதிலுள்ள தலைப்புகள்கூட அறம், இன்பம், பொருள் என்ற அடிப்படையில் போடப்பட்டிருக்கிறது. இவை அருமையான தலைப்புகள். ஏனென்றால், இவை வள்ளுவருடைய தலைப்புகள். இதில், அறம் என்கிற தலைப்பில் 25-வது பக்கத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தல் என்ற தலைப்பில் ஒரு செய்தியை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். தி.மு.க. அரசு கொண்டுவந்துள்ள தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒழிக்கப்பட்டு அரசு ஊழியர்களின் கோரிக்கைக்கேற்ப முழுமையான பழைய ஓய்வூதியத் திட்டம் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அரசு அதிகாரிகளுடன் நேற்றையதினம் நீங்கள் பேசப் போகிறீர்கள் என்றவுடன், கேட்பது என்னவென்றால் பழைய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் தொடர்ந்து செயல்படப் போகிறதா அல்லது பழைய ஓய்வூதியத் திட்டத்தை இந்த அரசாங்கம் அளிக்கப் போகிறதா என்ற ஒரு தெளிவு இல்லாமல் இருக்கிறது. அதனால், இதைப்பற்றி நீங்கள் பேசுங்கள், அரசு பதில் சொல்லும் என்ற சொல்லியிருக்கிறார்கள். அதனால், தன்னுடைய பதிலுரையில் சம்பந்தப்பட்ட மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (Tamil Nadu Assured Pension Scheme (TAPS)) தொடருகிறதா அல்லது பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வருவீர்களா என்கிற தெளிவு அரசு அதிகாரிகளுக்கு வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் உங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் உரையை நிறைவு செய்துவிடுகிறேன். இரண்டு நிமிடங்கள் மட்டும் கொடுங்கள், நிறைவு செய்துவிடுகிறேன்.

நீங்கள் எதை நீக்கினாலும், நியாயமாகத்தான் செய்வீர்கள். நீக்கிவிடுங்கள். நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இந்த தமிழ்நாட்டில் மிக மிக எளிமையாக இருந்தவர்களெல்லாம் முதலமைச்சராக இருந்தார்கள். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் காலில் காலணிக்கூட அணிய மாட்டார். அப்படி ஒரு முதலமைச்சர் அவர். மேலும், முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் என அனைவரும் எளிமையானவர்கள்தான். ஆகவே, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., அம்மையார் ஜெயலலிதா, ஓ. பன்னீர்செல்வம், எனக்குப் பக்கத்தில் இருக்கிற முன்னால் முதலமைச்சர் சகோதரர் எடப்பாடி பழனிச்சாமி , எங்கள் தலைவர் திராவிட மாடல் ஆட்சியினுடைய தலைவர் மு.க. ஸ்டாலின் இத்தனை முதலமைச்சர்களும், முதலமைச்சர்களாக இருந்து தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஏழ்மையைப் போக்கியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு வளர்ச்சியில் இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது என்று சொல்வதற்குக் காரணமாக இருந்த அத்தனை முதலமைச்சர்களும் அந்த அறையிலிருந்து தான் ஆணைகளைப் போட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு காலையில் ‘Times of India’ என்ற பத்திரிகையில் வந்த ஒரு செய்தியை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வேறொன்று மல்ல. ஆனால், இப்போது அந்த இடத்தை மாற்றி விட்டு, ஏறத்தாழ ஒரு கோடியே 30 இலட்சம் செலவில், எங்களுடைய அண்ணன் கலைஞர் தான் நாமக்கல் கவிஞர் மாளிகை அந்த 10 மாடி கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தவர் எங்களுடைய அண்ணன் கலைஞர் தான். இப்போது அந்த இடத்திற்கு முதலமைச்சர் போகிறார். என்னுடைய கேள்வி என்னவென்றால்,--அது அவருடைய விருப்பம். யார், எந்த அறையில் இருப்பது என்பது அவருடைய விருப்பம். யார், எந்த driver வைத்துக்கொள்வது என்பது அவருடைய சொந்த விருப்பம். அதில் நான் தலையிட முடியாது. ஆனால், இவ்வளவு திட்டங்களெல்லாம் இந்த நாட்டிற்குக் கொடுத்த இந்த அறை இப்படி இருக்கிறபோது, எங்களுடைய அண்ணன் கலைஞர் கட்டியிருக்கிற அந்த அறைக்கு அவர் போகிறார் என்பதில் எனக்குத் தனிபட்ட ஒரு விதத்தில் மகிழ்ச்சிதான். இது பிரிட்டிஷ்காரன் கட்டியது, அது தமிழன் கட்டியது; அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. ஆனால், இன்றையதினம் ‘Times of India’ பத்திரிகையில் என்ன செய்தி வந்திருக்கிறது என்று சொன்னால், ரூ. 5.54 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த tender, online-ல் விடப்படவில்லை. இந்த tender-ல் ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது என்று ‘Times of India’ பத்திரிகையில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் , பதிலுரையில் சொல்லட்டும், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஏனென்றால், இப்போது என்னுடைய time-ஐ எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். கடைசியாக, உங்களுடைய பதிலில் சொல்லுங்கள். அமைச்சருக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது. மணி கணக்கில்கூட நீங்கள் பேசலாம். ஆனால், நான் கேட்க விரும்புவது, ஏன் அந்த அறையிலேயே இருந்து பணியைப் பார்க்க வேண்டியது தானே? ஏனென்றால், அங்கு தலைமைச் செயலக சங்கத்தினுடைய தலைவர்கள், அதன் பொறுப்பாளர்கள் பேசுகிறார்கள்; இங்கே எங்களுக்கு உணவு அருந்துவதற்கு இடம் கிடையாது, எங்களுக்குப் புழங்கு வதற்கு இடம் கிடையாது, ஓய்வுக்கு இடம் கிடையாது; இந்த இடத்தை முழுமையாக எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், நாங்கள் எங்கே போவது என்ற அந்த ஒரு murmuring, அதாவது அங்கே பேசப்படுகிறது. அந்த அதிகாரிகளும், அலுவலர்களும் பேசுகிறார்கள். அதையும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், இந்த ஆட்சியின் கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

நீங்கள் எப்போதும் tender விஷயத்தில் நாங்கள் ரொம்ப purity என்று சொன்னீர்கள். ஆனால், இந்த tender சம்பந்தமாக, ‘Times of India’ பத்திரிகையில் இன்றைக்கு பக்கம் பக்கமாக, பணிகள் எல்லாம் நடந்த பின்பு இப்போது online-ல் tender என்று போடப்பட்டிருக்கிறது என்றெல்லாம் பத்திரிகையில் வந்த செய்தியை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நிறைவாக ஒரு குறளைச் சொல்லி முடிக்கலாம் என்று நான் கருதுகிறேன். “சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு

தாழ்ச்சியுள் தங்குதல் தீது” என்று வள்ளுவர் சொல்கிறார். இதை நான் சொல்லவில்லை, ஐயன் வள்ளுவர் எழுதியது. ஒரு செயலில் ஈடுபட்டு முடிவு எடுப்பதற்கு முன்பாக அச்செயலால் விளையும் சாதக பாதகங்களைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுத்திருக்க வேண்டும். அப்படி முடிவெடுத்த பிறகு காலம் தாழ்த்துவது. இப்போது முடியாது, மூன்று மாதம் கழித்துதான் முடியும், ஆறு மாதம் கழித்துதான் முடியும், இரண்டு வருடங்கள் கழித்துதான் முடியும் என்று காலம் தாழ்த்துவது எங்கு முடியு மென்றால், தீதில் முடியுமென்று வள்ளுவர் சொல்கிறார். நான் இதையெல்லாம் சொல்லவில்லை. இந்த ஆட்சிக்கு அவர் advice செய்கிறார், ரொம்ப காலதாமதம் செய்யாதீர்கள், அப்படிச் செய்தால் அது தீதாக அமையுமென்று வள்ளுவர் சொல்கிறார். எனவே, அந்த வள்ளுவர்தான் இந்த ஆட்சிக்குப் பொருத்தம் என்று சொல்லி, ‘அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா, ஆறிலும் சாவு நூறிலும் சாவு, தாயகம் காப்பதுதான் இந்த கழக உறுப்பினருடைய கடமை’ என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) என் உரையை நான் நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு எ.வ.வேலு உரையாற்றினார்.